# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி: 12

## போர்ப் பாயிரம் பாடிவரும்
## பல லட்சம் புரட்சிமணி

சட்டங்கள் பேசி வந்து 'சமர்' செய்யும் கூட்டம் அல்ல
பட்டங்கள் தாங்கிவந்து படைநடத்தப் போவதில்லை.
சுட்டெங்கள் சடலத்தை தெருவினிலெறிந்தாலும்—சதித்
திட்டங்கள் தீட்டி இளம் தீரர்களை அழித்தாலும்...........
[redacted]டு பந்தாட்டம் போட்டாலும்
[redacted] ஜெகந்தனை அழித்தாலும்—போர்ப்
பாயிரம் பாடிவரும் பலலட்சம் புரட்சிமணி !

யாமெல்லாம் யாரென்றால் யாழ்மண்ணின் கோரைப்புல்
யானைமிதி மிதித்தாலும் மீண்டெழுவோம் புதுத்தளிராய்
திரைகடல் தினம்மோதும் திருமலையின் கருங்கல்
திண்தோள்கள் தினவெடுக்க திரண்டெழுவோம் அமைப்பதனாய்

தாய் நாட்டை தாரைவார்க்கும் தரகு முதலாளிகளை
தமிழினத்தை உருக்குலைக்கும் தரம்கெட்ட ஆட்சிதனை
வல்லரசின் வலையத்தை விரித்துதவும் வஞ்சகரை
வன்மையுடன் அழித்திடவே வழியொன்று வகுத்திடுவோம்

காந்தி சொன்ன அஹிம்சை வழி, கையில்லா முடவன்வழி
வாய்வீரம் பேசிவிட்டு வர்க்க உடன்பாடாகும் வழி
நோய்தீரா நொதுமல் வழி ! நொண்டிகளின் குருட்டு வழி !
சாய்வீரா அந்த வழி ;? சமர் புரிவோம் புரட்சி வழி !!

1986 ஐப்பசி

கொடுங்கள்! கொடு உயிர் ! விடுதலை தமிழ்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு-24

## அவலங்கள் அத்தனையும் அவமாகிப் போய் விடுமா...?

எத்தனை அவலங்கள்... எத்தனை துயரங்கள். இத்தனை நடந்தும் இன்றும் ஈழத்தமிழினத்தின் நிலை கேள்விக்குறியாக இருப்பதன் காரணம் என்ன? அடிக்கடி அவலங்களைச் சந்திப்பதும் அதன் பின்னர் சில நாட்களில் அவற்றைத் துடைத்து விட்டு அடிமை வாழ்வைத் தொடர்வதும் எம் இனத்தின் மாறாத தலைவிதியாகி விடுமா...?

தமிழீழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா அரசும், பேரினவாதக் கும்பலும் இதுவரை காலமும் தமிழினத்துக்கு இழைத்து வந்த அடக்கு முறை அராஜகங்களின் உச்சக் கட்டமாக சமீபத்தில் ஆயிரக் கணக்கான எம் மக்களின் உயிர்களை இழந்தோம். எங்கள் நகரங்கள் தீயிடப்பட்டன... எங்கள் உடமைகள் சூறையாடப்பட்டன... இலட்சக்கணக்கான எம் மக்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக்கப் பட்டு ஈழத்துக்கு வந்தனர்.

ஆனால் வந்தவர்கள்... ஈழத்தில் நிலையாகத் தங்கினார்களா...? அல்லது தங்கத்தான் முடிந்ததா? அவர்களது வாழ்க்கைப் பிரச்சினையை முற்றத் தள்ளி விட்டு வயிற்றுப் பிரச்சினை நிற்கும்போது.... இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளையோ அல்லது தீர்வதற்கான வழிகளைத் தாமே தராமல் விட்ட இடத்தில் மீண்டும் சிறீலங்காவை நோக்கித் திரும்பிய அவர்களது கால்களை நாம் எப்படிப் பிழை கூற முடியும். எம் மக்களைப் புரட்சியின் பால் இட்டு வரும் செயல்திட்டங்களேதும் இல்லாமல் முடமாக நிற்கும் இயக்கங்களைத் தானே குறை கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை இழப்புக்களின் பின்னரும் கூட எங்களால்... ஈழ விடுதலை இயக்கங்களால்... தமிழ் மக்களை தமிழீழத்திலே தங்க வைக்க முடியவில்லை... அவர்களைப் புரட்சியின் பால் ஈர்த்துவர முடியவில்லை... சிலியிலும்... பாகிஸ்தானிலும்... பிலிப்பைன்சிலும் சர்வாதிகாரத்துக்கெதிராக நேரடிப் போராட்டத்தை மேற்கொள்ளும் மக்களின் எழுச்சியை எம் மக்களிடையே ஏற்படுத்த முடியவில்லை.

இவ்வளவு நாட்களாகத்தான் நாங்கள் விடுதலைக்கான தயாரிப்புக்களை மூலையிலே போட்டுவிட்டு அரசியல் சதுரங்கத்திலும்... அர்த்தமற்ற அறிக்கைகளிலும்... பிளவுகள், பேதங்களிலும்... துப்பாக்கிகளை எம்முள்ளேயே திருப்புவதிலும் கழித்தோம். ஆனால் இத்தனை அவலங்களை சந்தித்த பின்னும் அது தொடர வேண்டுமா...?

இன்று எம்மக்களின் இரத்தத்தோடு கலந்துவிட்ட ஈழ இலட்சியத்தை அடைவதற்காக இத்தனையையும் இழந்தோம். ஆனால் இதன் பின்னர் கூட இயக்கங்கள் இலட்சியப்பாதையில் தங்களை ஒன்றுபட்டு உறுதியாகப் பதிக்கத் தயங்குகின்றன. பேரழிப்பின் பின்னர் கூட உலக வலம் வரும் எமது 'தலைவர்' அமிர்தலிங்கம் "பிரதேச சுயாட்சியை' வலியுறுத்துகிறார்.

ஒரு கணம் திரும்பி நமது ஆக்கிரமிப்பாளரை... சிறீலங்கா பேரினவாத அடக்குமுறையாளரைப் பாருங்கள். கட்சிகள், பிரிவுகள் அவர்களிடையே இருந்தும் தமிழினத்தை அடக்குவதில்... அழிப்பதில்... அவர்களுக்கு இருக்கும் ஒற்றுமையைப் பாருங்கள். பாராளுமன்றத்திலே பிரிவினைச் சட்டத்திற்கெதிராக ஒரு கை உயர்ந்ததா...? அல்லது தமிழ்மக்களின் உரிமையை மறுக்க வேண்டும் என்ற உறுதியை பார்த்தசாரதியால் கூட மாற்ற முடிந்ததா?

அடக்கும் இனம் மேலும் மேலும் ஒன்றுபட்டு உறுதியாகிறது. அடிபடும் இனம் மேலும் மேலும் பிளவுபட்டு சிதைகிறது என்ற இன்றைய நிலையை மாற்றுவோம். இதய சுத்தியுடன் விடுதலைக்கான முன்னெடுப்புக்களை இனியாவது இணைந்து தயாரிப்போம். தமிழ் மக்கள் சிந்திய கண்ணீரின் பெயராலும் செந்நீரின் பெயராலும் ஈழ விடுதலை இயக்கங்கள் இவ்வுறுதியை எடுக்கட்டும்.

-காந்தன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தமிழீழ விடுதலைப் போராளிகளின் துணிகரத் தாக்குதல்! மட்டுநகர் சிறை தகர்ப்பு! ..... கைதிகள் விடுவிப்பு! ......

பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலமும் தமிழீழமெங்கும் ஆயுதப்படைகளைக் குவித்து வைத்திருப்பதன் மூலமும் தமிழீழ விடுதலைப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்தின் முனையை மழுங்கடித்து விட்டதாக தம்பட்டமடித்த சிறீலங்கா அரசுக்கு ஈழ விடுதலைப் போராளிகள் பேரடியைக் கொடுத்துள்ளனர்.

செப்டம்பர் 23ம் திகதி 'அதிஉயர்ந்த பாதுகாப்பு'க்கு உட்பட்ட மட்டுநகர் சிறைச்சாலை உடைக்கப்பட்டு அங்கு சிறைவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி வந்த 35ஐ அண்மித்த தமிழீழ விடுதலைப் போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மிகவும் துணிகரமாக ஈழவிடுதலைப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவம் சிறீலங்கா அரசுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. விடுவிக்கப்பட்ட போராளிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனக் கருதப்படுகின்றனர். இச்சம்பவத்தின் போது அதே சிறையில் இருந்த வண. பிதாக்களும், டாக்டர். தர்மலிங்கம், கோவை, நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் தப்பிச் சென்று மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. அதேசமயம் சிறையிலிருந்த இதர 150 கைதிகளும் தப்பிவிட்டனர். இத்துணிகரத் தாக்குதல் சிறீலங்கா அரசுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அயர்லாந்திலும் சிறை உடைப்பு! ஐ.ஆர்.ஏ. வீரர்கள் மீட்பு!

பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களால் ஆயுள்தண்டனை விதித்து பெல்பாஸ்ட்டுக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த 13 அயர்லாந்தின் விடுதலைப் போராளிகள் சிறைகளை உடைத்து தப்பியுள்ளனர். இச்சம்பவம் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளருக்குப் பேரதிர்ச்சியை அளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழகச் செய்திகள்

## விமானப் படையினரின் வெறியாட்டத்திற்கு இரு தமிழ் வாலிபர்கள் பலி!

வவுனியாவில் சிறிலங்காவின் விமானப் படையினரால் கைது செய்யப்பட்டு 'விசாரணை'க்காக வவுனியா விமானப்படை முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்ட ஐந்து தமிழ் வாலிபர்களில் இருவர் விமானப் படையினரின் வெறித்தனமான தாக்குதல்களினால் கொல்லப்பட்டுள்ளனர். வவுனியா கல்மடு குடியேற்றத்தில் வசிக்கும் நாகலிங்கம் சிவஞானம் (27வயது), தில்லையம்பலம் சிவநேசன் (22வயது) ஆகியோரே இவ் இருவருமாகும். இச்சம்பவத்தையடுத்து வவுனியாவில் பெரும் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு சிறிலங்கா அரசின் மிரட்டல்!

பேரினவாதத் தாக்குதலுக்கு உள்ளாகி அனைத்தையும் பறிகொடுத்து மயிரிழையில் உயிர்தப்பி அகதிகளாக தமிழீழம் வந்திருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் ஊழியர்களை செப்டெம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன் வேலைக்குத் திரும்புமாறும் இல்லையேல் பதவி இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் அரசாங்கம் மிரட்டியுள்ளது. இவர்களுக்கான பாதுகாப்பு, வதிவிடங்கள் போன்ற எந்த வசதியும் செய்யப்படாமல் இன்னும் வெறி தணியாமல் காத்திருக்கும் பேரினவாதக் கும்பலுக்கு பலி கொடுப்பதற்காகவும் தமிழ் மக்கள் மீண்டும் சிறீலங்காவுக்கு வந்து விட்டார்கள் என்று உலகிற்குக் காட்டுவதற்காகவும் சிறீலங்கா அரசு தமிழ் ஊழியர்களை இப்படி மிரட்டியுள்ளது. ஆனால் பெருந்தொகையான தமிழ் ஊழியர்கள் இம்மிரட்டலை அலட்சியம் செய்து வேலைக்குத் திரும்பாது தமிழ் ஈழத்திலேயே தங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் வண. கனகரத்தினம் கைது!

காந்தீயம் இயக்கத்தை சிதைத்து அதன் தலைவர் டாக்டர். இராஜசுந்தரத்தைக் கொலை செய்தும் கூட சிறீலங்கா அரசின் வெறி அடங்கவில்லை. தற்போது காந்திய இயக்கத்திற்கு உதவி புரிந்தவர்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளது. இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்துக்குமான குழுவின் (மிராஜ்) வவுனியா கிளையின் தலைவரும் ஆங்கிலிக்கன் குரு. ஆன வண. கனகரத்தினம் சிறீலங்கா ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

## பார்த்தசாரதியின் தூது பயனளித்ததா?

இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் பார்த்தசாரதி தமது பேச்சு வார்த்தைகளின் இரு கட்டங்களை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பியுள்ளார். அவர் சிறீலங்காவின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களுடனும், சிறீமாவோ பண்டாரநாயக்கா உட்பட பல அரசியல் தலைவர்களுடனும் தமது இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தையை மேற்கொண்டார். த. வி. கூட்டணிப் பா. உ. க்களும் இதில் கலந்துகொண்டனர்.

இதுவரை நடந்த இந்தப் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்திகள் எதையும் தரவில்லை. தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பதில் சிறீலங்கா அரசாங்கம் மிகவும் பிடிவாதமாக இருக்கிறது. வெறும் மாவட்ட ரீதியில் தமிழ் மக்களுக்கு அதிகாரம் அளிப்பதைக் கூட சிறீலங்கா அரசு விரும்பவில்லை எனத் தெரிகிறது.

## விரைவில் கிளிநொச்சி தனி மாவட்டமாகும்!

தமிழ் மாவட்டங்களைப் பிரித்து பலவீனப்படுத்தி எதிர்ப்பேதும் இல்லாமல் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் தனது திட்டத்தை நிறைவேற்றும் வகையில் விரைவில் கிளிநொச்சியை தனிமாவட்டமாக்கப் போவதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. இச் சதிக்கு கிளிநொச்சி பா. உ. ஆனந்தசங்கரி துணைநின்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தில் குடியேறியுள்ள மலையகத் தமிழருக்கு எதிராக தொடரும் தாக்குதல்கள்...

தமிழீழத்தின் பல பகுதிகளிலும் குடியேறியிருக்கும் மலையகத் தமிழ் மக்கள் அரசபடையினராலும், அதிகாரிகளாலும் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளாகி வருவதுடன், அவர்களது இருப்பிடங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டு வருகின்றனர். செப்டெம்பர் 4, 5ம் திகதிகளில் மட்டுநகரிலுள்ள வடமுனை எனும் கிராமத்தில் திருமலை மாவட்ட அமைச்சர் நெல்சனின் தலைமையில் 1000 பேரைக் கொண்ட காடையர் கும்பல் ஒன்று பிரவேசித்து அங்கு குடியேறியிருந்த மலையகத் தமிழர்களை அடித்து விரட்டி விட்டு அவ்விடத்தில் 750 சிங்களவரைக் குடியேற்றியுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக வவுனியா, திருமலை ஆகிய இடங்களிலும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்ச்சியாக மலையகத் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன.

## உலக நாடுகள் தமிழ் அகதிகளுக்கு அளித்த நிவாரண உதவிகள் எங்கே...?

பேரினவாதத் தாக்குதலுக்கு உள்ளாகி, அனைத்தையும் இழந்து அகதிகளான தமிழ்மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக உலகநாடுகள் பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பணம், உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் போன்றவற்றை சிறிலங்கா அரசுக்கு அளித்திருந்தன. ஆனால் இந்த உதவிகளில் ஒரு துளி தானேனும் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படவில்லை. தமிழ் பகுதிகளில் முகாம்கள் தமிழ் சமூக சேவை ஸ்தாபனங்களாலும், மக்களாலுமே நடத்தப்படுகின்றன. சிறிலங்காவிலுள்ள இரண்டொரு முகாம்களிலுள்ளவர்களை உடனடியாக வெளியேறிவிடுமாறு அரச அதிகாரிகள் மிரட்டி வருகின்றனர். வெளிநாடுகள் அளித்த பெருந்தொகைப் பணம் ஏப்பமிடப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழத்தில் சிறீலங்கா அரச இயந்திரம் ஸ்தம்பிதம்!

தமிழீழத்தில் சிறீலங்காவின் அரச இயந்திரம் ஸ்தம்பிதமடைந்துள்ளது. 15க்கும் மேற்பட்ட உப தபால் நிலையங்கள் தீவிரவாத இளைஞர்களின் எச்சரிக்கையால் மூடப்பட்டுவிட்டன. பாடசாலைகள் பெரும்பாலும் வெறிச் சோடிக் கிடக்கின்றன. பஸ் சேவை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே நிறுத்தப்பட்டுவிடுகிறது. சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டன. அதேவேளையில் காங்கேசன்துறைத் துறைமுக வேலைத் தளப்பகுதியில் இருந்த விஜயரந்த மின்னியக்க இயந்திரமொன்று துப்பாக்கி ஏந்திய இளைஞர்களால் துணிகரமாக அபகரிக்கப்பட்டுள்ளது.

## மேற்கு நாடுகளில் அமிர்தலிங்கம்....

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் பிரிட்டன், மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து சமீபத்திய தாக்குதல்களால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட நிலையை விளக்கிப் பிரச்சாரம் செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாரிசில் பெரியார் பெருவிழா!

பாரிஸ் நகரில் தந்தை பெரியார் ஈ.வே.ரா.வின் நினைவுப் பெருவிழா கொண்டாடப்பட்டது. உலகத் தமிழர் முன்னேற்றக் கழகத்தினரும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரும் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவில் திராவிடக் கழக பொதுச் செயலாளர் திரு. வீரமணி, உலகத் தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. பெருஞ்சித்திரனார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளை ஆற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ○ 'அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் ஆயுதப் படையினருக்கு முன்றலேயே நடைபெற்றன'.... சிறீலங்காவின் பிரதி நீதியமைச்சர்.

தமது பதவிச் சுகங்கள் பறிபோய்விடும் என்ற அச்சத்தில் சிறீலங்காவின் அமைச்சரவையில் உள்ள தேவநாயகம், இராஜதுரை போன்றவர்கள் அடிமைகளாய்...எச்சில் இலை நாய்களாய் வாய்பொத்தி நின்றபோதும் கூட சிறீலங்காவின் பிரதி நீதியமைச்சர் ஷெல்டன் ரணராஜா, அப்பாவித் தமிழ்மக்களுக்கெதிரான வன்முறைத் தாக்குதல்கள் சிறீலங்காவின் பொலிஸ், இராணுவத்தினரின் கண் முன்றலே நடந்துள்ளன என்பதைப் பகிரங்கப்படுத்தியுள்ளார். கண்டியில் எரிக்கப்பட்ட தமிழ் மக்களின் கடைகளின் தீயை அணைக்க ஒரு வாளி தண்ணீர்கூட எவரும் தரவில்லை என்றும் இத்தகைய கொடுமைகளின் சூத்திரதாரியாக இருந்தவர்களைச் சட்டத்தின் முன்னால் பிடித்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ☆ நீதியரசர்கள் உட்பட பலர் பிரிவினைக்கு எதிராக விசுவாசப் பிரமாணம் செய்ய மறுப்பு!

தமிழீழக் கோரிக்கையைத் தடைசெய்யும். பிரிவினைக்கெதிராக ஐக்கிய இலங்கையை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்திற்கு அமைய விசுவாசப் பிரமாணம் எடுக்க இலங்கை உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் உட்பட 10 நீதியரசர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 12 நீதியரசர்களும் மறுத்து தமது பதவிகளிலிருந்து தாமே விலகியுள்ளனர். இதன் காரணமாக சிறீலங்காவின் உயர், மேல் நீதிமன்ற அலுவல்கள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன. இதுபோன்றே சிறீலங்காவின் அரசசேவையில் பணிபுரிந்த எண்ணற்ற தமிழ் ஊழியர்களும் மேற்படி விசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்துள்ளனர். இந்நிலை சிறீலங்கா அரச இயந்திரத்தின் செயற்பாடுகளை முடக்கியுள்ளதுடன் வெறும் சட்ட வாக்கியங்களின் மூலம் தமிழ்மக்களின் உரிமைக் கோரிக்கையைத் தடை செய்ய முயன்ற அரசாங்கத்துக்கு சேற்றைப் பூசியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ச்சியாக பல ஐ.தே.க. உறுப்பினர்கள் பதவி விலகல்!

வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள மாவட்டசபை, மாநகர, நகர சபைகளைச் சேர்ந்த ஐ.தே.க. உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து வருகின்றனர். இவர்கள் தமது ஐ.தே.கட்சியின் உறுப்பினர் பதவிகளையும் இராஜினாமாச் செய்வதாகப் பகிரங்க அறிவித்தல்களை விடுத்துள்ளனர். அதே வேளையில் பல மாவட்ட, உள்ளூராட்சிச் சபைகளின் த.வி. கூட்டணி உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

## பிரிவினைக்கு எதிரான விசுவாசப் பிரமாணம் தொடர்பாக 'புலிகள்' அறிக்கை!

பிரிவினைக்கெதிரான ஆறாவது திருத்தத்திற்கு அமைய விசுவாசப் பிரமாணம் எடுக்க வேண்டாம் என புலி இயக்கத்தினர் பாராளுமன்ற உறுப்பினர்களையும், தெரிவு செய்யப்பட்ட இதர உறுப்பினர்களையும், உயர் பதவி வகிப்போரையும் கோரியுள்ளனர். அதே வேளையில் விரைவில் தமிழீழப் பொருளாதாரத் திட்டங்கள் அறிவிக்கப்படும் என்றும் அதுவரையில் சாதாரண அரசஊழியர்கள் தமது விருப்பப்படி செயல்படலாம் என்றும் புலி இயக்கம் கூறியுள்ளது.

த.வி. கூட்டணி பாராளுமன்றக்குழு மேற்படி பிரமாணத்தை எடுப்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. அதுபோல மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கமும் சத்தியப் பிரமாணம் செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

---

'இலங்கை அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் சட்ட ஆளுமையின் சிறப்பிடத்தைக் வீழ்ச்சிக்கு வழியானது....'

— சர்வதேச மனித உரிமைக்குழு சட்ட உறுப்பினர் செல்வி அமியன்

● ● ● ● ● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENNAM

எண் 1
இல 12
1.9.83

# எண்ணம்

1.9.82
↓
1.9.83.

விடுதலைப்பாதையிலே புரட்சிகரக் கருத்துக்களைப் பரப்பி... வித்தியாசமான தடங்களைப் பதித்து... மேற்கு ஜேர்மனியிலிருந்து வெளியாகும் 'எண்ணம்' மாத இதழின் முதல் ஆண்டுப் பூர்த்திக்கு **எங்கள் புரட்சிகர வாழ்த்துக்களைத்** தெரிவித்துக் கொள்வதுடன்– ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

'எண்ணம்' - அக்டோபர் இதழிலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்.

## முதலாளித்துவம்... முதலாளித்துவம்... முதலா...

....முதலாளித்துவம் தேசங்களை வெற்றுக் கோம்பைகளாக்கியதோடு இரத்தஞ் சிந்தப் பண்ணிக் கொண்டு அடிச்சுவடில்லாமல் அழிக்கின்றது. இவர்கள் எதிர்கால மனித சமுதாயத்தை அபிவிருத்தி செய்யும் வலு அற்றவர்களாகி விட்டார்கள். அரசியல் இடை நிலைக் குழுக்களும், முக்கியமான தேச பக்தக் கட்சிகளுங்கூட உக்கி நாறி உருக்குலைந்து கொண்டிருக்கின்றன. பாட்டாளி வர்க்கமும், ஒடுக்கப்பட்ட மக்களும் ஒவ்வொரு நாளும் மேலும், மேலும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே போகிறார்கள். ஒவ்வொரு நாளும் சூரியன் உதித்து புதிய ஏமாற்றத்தை அன்புக்கரம் நீட்டி வரவேற்கவும்... புதிய ஒடுக்குமுறையைத் தாங்கித் தாம்பாளத்தில் வாங்கவும் சொல்கிறது. அது புரட்சியிலே நம்பிக்கை வை... புரட்சியிலே நம்பிக்கை வை என்ற கூக்குரலை எழுப்பி அதனாலே ஒரு சக்தியைத் திரட்டுகிறது. இப்படிப்பட்ட சக்தி திரண்டாலே ஒழிய இக் காட்டு மிராண்டித்தனமும் பேரழிவும் நிற்கப் போவதில்லையென்பதைச் செப்பிடுகின்றது. வரலாறு இன்று வரை பாராளுமன்றத் தேர்தல் பெரும்பான்மைவாதிகளைச் சமூகப் புரட்சியின் பக்கம் வென்றெடுக்கவில்லை. பாராளுமன்றத்திலே வெள்ளி நாக்கால் விவாதிப்பவர்கள், சமுதாயப் புரட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியதை இன்றுவரை சரித்திரம் காணவில்லை. வன்முறைப் புரட்சியென்பது சரித்திரத்தின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


தவிர்க்க முடியாத காரணியாகிவிட்டது. ஏனெனில் பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் சமாதானத்தை நிலவப் பண்ணும் முயற்சியில் வரலாறு நிர்க்கதியாகிவிட்டது. முதலாளித்துவம் சொல்கிறது....

"...எனது கையில் நில புலங்களும், தொழிற்சாலைகளும், வங்கிகளும், பிரச்சாரப் பத்திரிகைகளும், சர்வகலாசாலைகளும், பாடசாலைகளும் இருக்கின்றன. அதற்கு மேலாக எங்களிடம் ஆயுதபலம் இருக்கின்றது. நீ என்ன மாதிரி ஜனநாயகத்தைக் கட்டி எழுப்பினாலும் அது எனக்கு மீளா அடிமையாக இருந்தே சேவகஞ்செய்யும். அதனோடு கூடவே மூட புத்தி உள்ளவர்களும், பழமை விரும்பிகளும், நற்குணமற்ற நடுத்தரவர்க்கத்தாரும் எனது நலன் பேணும் விதத்திலேயே நடப்பார்கள். நான் இருக்குவேன்... கட்டாயம் தொடர்ந்து இருக்குவேன். எனது வானளாவிய உயர்ந்த கட்டிடங்களாலும், எனது பணக் கொடுக்கல் வாங்கல் முறையாலும், எனது திட்டங்களாலும், எனது கொடுமையாலும் இவர்களது கற்பனைக் கெட்டாத வகையில் இருக்குவேன். சில நேரங்களில் இவர்கள் அதிருப்தியடைந்து முணுமுணுக்கத் தொடங்குவார்களானால் அதிலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பாதுகாப்பு ஓட்டைகளை நான் ஏற்படுத்தியுள்ளேன். அதுதான் தகாத காலங்களில் எனது எதிர்க்கட்சிகளுக்கு உயிர் கொடுப்பேன். அவர்கள் நாளைக்கு அழிந்து விடுவார்கள். அதன் மூலம் நடுத்தரவர்க்க மனிதர்கள் தமது விரக்தியைக் குறைப்பார்களோ பழைய முதலாளித்துவம் தொடர்ந்து தப்பிப் பிழைக்கும்...."

"...வெகுஜனங்கள் எனது கைப்பிடிக்குள்ளேயே இருப்பார்கள். கல்லூரிகளிலே நான் கற்பிக்கும் பாடங்களின் மூலமும் அவர்களை முட்டாள்தனத்திலுள்ளே சஞ்சரிக்க விடுவதன் மூலமும் அவர்களை ஆத்மிக அடிமைகளாக வைத்திருப்பேன். நான் ஊழல் செய்வேன், ஏமாற்றுவேன், சிறிது நன்றாக வாழ்பவர்களை பயமுறுத்துவேன். இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளினால் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் மற்றவர்களின் காதுகளிலே, பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்களது கூக்குரல் விழாதபடி தடுத்துவிடுவேன். இந்த நேரத்திலே அதி நுட்பம் வாய்ந்த ஆயுதங்களும், ஆயுதப்படையின் பயங்கரவாதமும் எனது கையில் இருக்கும். என்னிடமிருந்து தப்புவதற்காகச் சட்டப் புத்தகங்களை துருவித் துருவி ஆராயும் சமயம் நான் வன்முறையை மடை திறந்து விடுவேன். நான் வாக்காளர்களின் எண்ணிக்கையைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும், ஆயுதப்படைகளின் எண்ணிக்கையைத்தான் நான் நம்பிக்கை வைப்பவன்..." இதுவே முதலாளித்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனை எங்கள் இதயத்தில் இருத்துவோம்!



மறைந்த, தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின் செயலதிபர்
**தேவசேகரம் (தேவன்)**

சென்று திரும்பா என் நண்பனின் கதையை
எமது மண்ணிலே
துயருடன் அவர்கள் கூறுகின்றனர்.
எமது இதயங்களில் அச்சொல்
புனிதமாய் இருக்கட்டும்
சாம்பலைப்போல் காற்று அதனையும்
அள்ளிச் செல்ல விட வேண்டாம்.
சுகப்படுத்த முடியாத ஒரு காயமாக
அவனை எங்கள் இதயத்தில்
இருத்துவோம்.

எங்கள் மண்ணிலே
அவனது கதையைக் கூறுகின்றனர்
அவன் மறைந்த போது
அவனது தாயிடம் விடைபெறவில்லை
நண்பர்களைச் சந்திக்கவில்லை
வழி பார்த்திருக்கும் அவனது தாயின்
நீண்ட இரவுக்கு விளக்கேற்றும்
ஓர் சொல்லைத்தானும் அவன் கூறிச்
செல்லவில்லை.
அவனது தாயோ ஆகாயத்தோடும்
அவனது தலையணை, அவனது பெட்டி
என்பவற்றோடுமே பேசுகின்றாள்
அவளுக்குச் சொல்லுங்கள்:
எம்மிடம் விடையில்லை.
உண்மையை நீ தாங்க மாட்டாய்
ஏனெனில் உனது மகன் இறந்துவிட்டான்
தாயே
கண்ணீரை முழுதாய் விடாதே. கண்ணீருக்குத்
தேவை இருப்பதால் ஒவ்வொரு மாலை
நேரத்துக்கும் அதில் கொஞ்சம் வைத்திரு.



தேவனின் தாயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அந்திம காலம் நெருங்குகிறது...! ☆ ☆ ☆

தன்னுடைய பொருளாதாரச் சுரண்டலுக்கும், படைத்தள அமைப்புக்கும் ஆசிய நாடுகளைப் பயன்படுத்தி அந் நாடுகளில் வறுமையையும் அமைதியற்ற சூழ்நிலைகளையும் தோற்றுவித்து அதில் குளிர் காய்ந்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேரும் கலைய ஆரம்பித்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மைகளான பிலிப்பைன்சின் மார்க்கோஸ், பாக்கிஸ்தானின் ஸியா உல் ஹக், சிறிலங்காவின் ஜெயவர்த்தன போன்றோரின் ஆட்சிக்கெதிராக மக்கள் போர்க்கொடியைத் தூக்கி விட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக கையறு நிலையை அடைந்துவிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் விரைவில் ஆசியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட இருப்பது வரலாற்றுக் கட்டாயமாகிவிட்டது. இந்த நிலை ஈழ விடுதலைப் போராட்டத்தின் தடைகளை தகர்த்து விடுதலைக்கு உந்துசக்தியாக அமையப் போகிறது.




பாக்கிஸ்தான் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்து, எதிர்க்கட்சிகளைத் தடை செய்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகளை அம்பலப்படுத்த முயன்ற பூட்டோவை கொலை செய்து, தொழில் மயமாகும் இந்தியாவை அமெரிக்க ஆயுதக் கொள்வனவு மூலம் அச்சுறுத்தி, இராணுவ ஆட்சி புரிந்துவரும் அமெரிக்கக் கைப்பொம்மையான பாக்கிஸ்தானின் இராணுவ ஆட்சியாளன் ஸியா உல் ஹக்கிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான போராட்டம் இன்று பாக்கிஸ்தான் முழுவதும் முடுக்கிவிடப்பட்டுவிட்டது. மாகாணங்கள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி மேற்கொள்ளும் இப் போராட்டங்கள் ஸியா எதிர்ப்புக் கோஷங்களுடன் அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களையும் ஒலித்து வருவதுடன் பல இடங்களில் வன்முறைப் போராட்டங்களாக உருவெடுத்துள்ளன. ஏகாதிபத்தியத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் எதிரான பாகிஸ்தான் மக்களின் இந்தப் போராட்டம் விரைவில் ஸியாவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பாக்கிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப் போவது மாற்ற முடியாத உண்மையாகும்.



*Filipino students burn an effigy of U.S. President Ronald Reagan during a demonstration in Manila: The opposition steps up its attacks* AP

பிலிப்பைன்ஸில் ரீகனின் கொடும்பாவி எரிக்கப்படுகிறது.

ஜனநாயக வழியில் நம்பிக்கை கொண்டு அந்த வழியில் ஆட்சி அமைக்க முடியும் என்ற உறுதியுடன் நாடு திரும்பிய பிலிப்பைன்சின் எதிர்க்கட்சித் தலைவர் அக்கியூனோவை விமான நிலையத்தில் வைத்தே துடிக்கத் துடிக்க சுட்டுக் கொலை செய்தனர் அமெரிக்கச் சதியாளர்களும் பிலிப்பைன்சின் ஜனாதிபதி மார்க்கோசும். சர்வாதிகாரி மார்க்கோசின் கொடுமைகளின் சிகரமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கோசின் சர்வாதிகாரத்தினதும் அமெரிக்கச் சதியினதும் கொடுமைகள் பிலிப்பைன்ஸ் மக்களின் பொறுமைகளை இழக்கச் செய்து இன்று அவர்களை விழித்துக் கொண்டு வந்துள்ளது. மணிலா நகரவீதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் சர்வாதிகாரத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான போராட்டத்தை தொடங்கியுள்ளனர். கொலை செய்யப்பட்ட தலைவர் அக்கியுநோவின் மனைவி இலட்சக்கணக்கான மக்களின் முன்னிலையில் மார்க்கோசின் ஆட்சியைத் தோற்கடித்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்டி அடிப்பதற்கு உறுதி எடுத்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது றீகனின் கொடும்பாவி எரிக்கப்பட்டதுடன் அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்கள் புதிய உத்வேகத்துடன் ஒலிக்கப்பட்டன. பிலிப்பைன்சிலும் விரைவில் சர்வாதிகாரி மார்க்கோசின் ஆட்சி தூக்கியெறியப்படப்போவதும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முதுகொடிக்கப்படப் போவதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

இந்த நிலையிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே திட்டமிட்ட அமெரிக்கசதியின் அம்சமாக சோவியத் யூனியனுக்கு ஆத்திரமூட்டி கொரிய விமானம் சுடப்பட்டது. தமிழ் மக்கள் மீது தாக்குதல் நிகழ்த்தி இந்தியா சீண்டப்பட்டு போருக்கு அழைக்கப்பட்டது. இவை போல இன்னும் நூறு சதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்யும். ஆனால் இன்னும் எத்தனை நூறு சதிகளைச் செய்தாலும் இன்று பொங்கி எழுந்திருக்கும் மக்கள் சக்தி ஆசியாவிலே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆட்சி அதிகாரத்தை கருவறுக்கப் போவது உண்மை. இலத்தின் அமெரிக்காவில் பற்றிப் படர்ந்திருக்கும் புரட்சிப் பொறிகள் விரைவில் ஆசியாவிலும் கிளர்ந்து எரிந்து அமெரிக்காவை சுட்டுப் பொசுக்கப்போவது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ○ ஆக்கிரமிப்பு எதிரிக்கு எதிரான ○○○○○○ ○○○○ போராட்டத்தில் ஐக்கியப்படுவோம்.

- சிவகுமார் -

மொத்த ஈழத்தமிழினமும் விடுதலையை விரும்பி நின்ற போதும் விடுதலையை அடைவதற்கான வழிகளில் பாரிய முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டிருக்கிறதா என்றால் விடை கேள்விக்குறியாகத்தான் உள்ளது. விடுதலைப் பாதையில் முதற்கட்ட நடவடிக்கையாக, அடக்குமுறை ஆக்கிரமிப்பு எதிரிக்கு எதிராக எதிர்ப்புக் குரலை ஓங்கி ஒலிப்பதில் கூட நாம் பிளவுபட்டு...பிரிவுபட்டுத்தான் நிற்கிறோம். எமது மொழி, கலாச்சாரங்களின் வீழ்ச்சிகட்கு நாமே காரணமாகி எம்மினம் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையைப் பாவித்து ஆக்கிரமிப்பு அரசு தனது மண்ணிலிருந்து மட்டுமல்ல இன்று எமது மண்ணிலிருந்தே எம்மை விரட்டத் திட்டமிட்டு இனக்கலவரங்களை கட்டவிழ்த்து எம்மக்களை வேட்டையாடி வருகிறது.

பகுதி பகுதியாக எங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த வேளையில்கூட தமிழீழத்தின் பிரஜைகளாகிய எம்மில் பலர் பெற்ற தாயை...பிறந்த மண்ணை மறந்து, உடன் பிறப்புகள் உயிருக்குப் போராடும் நிலையை மறந்து உண்டு, குடித்து சுகபோக வாழ்வினை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். சுகபோக வாழ்விலே லயிப்பதை நாம் தவறென்று கூறவில்லை. ஆனால் எந்தக் காரணங்களுக்காக வெளிநாடுகள் எங்களுக்குப் புகலிடம் தந்ததோ அந்த நாடுகள் உணர்ந்து கொண்டிருப்பதிலும் மிகக் குறைவான அளவிற்கு எமது மண் பறி போவது பற்றியும், எமது உடன்பிறப்புக்கள் கொல்லப்படுவது பற்றியும், எமது சகோதரிகளின் கற்பு சூறையாடப்படுவது பற்றியும் சிந்திக்கின்ற நிலையையே நாம் தவறென்று கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களெல்லாம் மனிதர்கள் தானா என்ற கேவலமான கேள்வியை எழுப்புகின்ற வேளையிலே இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடவேயாக வேண்டும். வெளிநாடுகளில் இன்று நாம் சிரமப்பட்டு உழைத்து அந்தப் பணத்தை ஈழத்துக்கு அனுப்பினால் கூட அந்தப்பணத்தை இன்று ஈழத்தில் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. எல்லாவகையிலும் நாம் விடுதலையைத் தவிர வேறு வழி எதுவுமில்லை என்ற இறுதி முடிவுக்கே தள்ளப்படுகிறோம்.

எமது சொந்த பூமியிலும், சிறிலங்காவிலும் தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக ஏவி விடப்பட்ட தாக்குதல்கள் எத்தனை உயிர்களைப் பலிவாங்கியிருக்கின்றன... எத்தனை பெண்களின் கற்புக்களை பறித்துள்ளன... எத்தனை மில்லியன் சொத்துக்களை சூறையாடியுள்ளன. இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் எமது ஒற்றுமையின்மை என்பதும் ஒரு வகை உண்மையாகும். எனவே எம்மிடையே ஐக்கியம் ஏற்படாவிடின் விடுதலைக்கான கதவுகள் ஒருபோதும் எமக்காகத் திறக்காது.

தமிழீழ விடுதலையைத் தவிர தமிழ்மக்களுக்கு வேறெதுவும் தீர்வைத் தராது என்பதுபோல ஐக்கியத்தைத் தவிர வேறெதுவும் விடுதலையை வென்றுதராது. எனவே விடுதலைதான் முக்கியம் என்ற இதய சுத்தியுடன் இயங்கும் தமிழீழ ஆயுத, அரசியல் இயக்கங்கள் அனைத்தும் எமது பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படவேண்டும். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பிரிவுகள் இருந்தபோதும் பொது எதிரியான இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் எப்படி அவர்கள் ஐக்கியப்பட்டுப் போராடுகிறார்களோ அந்தவழியை ஆயுதப் போராட்டம் நடத்தும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் பின்பற்ற வேண்டும். ஏனெனில் எமது விடுதலைக்கான திறவுகோல் ஐக்கியமாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும்... தொடர்ந்தும்... தமிழ்மக்கள் மீது தாக்குதல்கள்... கைதுகள்....

- தமிழீழம், சிறீலங்கா இரு நாடுகளிலும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் சிறீலங்கா அரசபடைகளின் இம்சைகட்கு ஆளாகி வருகின்றனர்...

- கொழும்பில் தொடர்ச்சியாக தமிழ் வர்த்தக நிறுவனங்கள் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. புறக்கோட்டை 4ம் குறுக்குத் தெருவில் வியாபாரம் செய்தவர்களுக்கு அங்கு மீண்டும் வர்த்தகத்தை தொடரும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

- பிரிவினைச் சட்டத்திற்கு ஆதரவாக விசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்த நீதியரசர்கள் துப்பாக்கி முனையில் பிரமாணம் எடுக்கச் செய்யப்பட்டுள்ளார்கள்.

- யாழ். கண்டி வீதியில் இரத்தக்காயங்களுடன் கிடந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த ஏ. சிவலிங்கம் மரணமானார். இவர் இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளானார் எனக் கூறப்படுகிறது.

- தாழ்வுபாடு கடற்கரையிலும், மண்கும்பான் கடற்கரையிலும் இரு இளைஞர்களின் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன. இவை சிறீலங்கா கடற்படையினரின் வெறியாட்டத்துக்குப் பலியானவர்களென கருதப்படுகிறது.

- கொடும்பாவி எரித்தார்கள் என்று குற்றஞ்சாட்டி காங்கேசன் துறையில் 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் 16,17 வயது நிரம்பியவர்கள்.

சமீபத்திய அசம்பாவிதங்களை அடுத்து மட்டுநகரில் இராணுவ வெறியாட்டம் ஆரம்பமாகியுள்ளது. 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 20க்கும் மேற்பட்ட வீடுகள் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சிலியில் பெரும் எழுச்சி! ☆ ☆ ☆



அடக்குமுறையைக் கண்டும் அவர்கள் அஞ்சவில்லை.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சிலியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அலெண்டேயின் மார்க்சிய அரசாங்கத்தை சி.ஐ.ஏ. சதி செய்து கவிழ்த்து தனது கைப்பொம்மையான பின்கொட்டின் தலைமையிலான இராணுவ ஆட்சியை நிறுவியது.

இந்த இராணுவ ஆட்சி மக்களின் உரிமைகளை மிதித்ததுடன் மாத்திரமன்றி நாட்டைப் பூரண பொருளாதாரச் சகதியினுள் தள்ளியுள்ளது. நாட்டின் பணவீக்கம் 35%ஐக் கடந்து விட்டது. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 33%. 1.3 மில்லியன் தொழிலாளர்கள் மாதம் 30 டொலர்கள் மாத்திரம் ஊதியமாகப் பெறுகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் நாட்டைச் சூறையாடி வெற்றுக் கோம்பை ஆக்கிவிட்டது. இந்த அக்கிரமத்துக்கெதிராக மாதமொருநாள் என்ற ரீதியில் போராட்டம் நடத்திவரும் சிலியின் மாணவ, தொழிலாளர், பெண்கள் கூட்டம் விரைவில் பின்கொட்டின் இராணுவ ஆட்சியை நிராகரிக்கப் போவது நிச்சயம்.

---

யூலை-23ம் திகதி திருநெல்வேலியில் ஆக்கிரமிப்புப் படைகள் மீது தாக்குதல் நடத்தி 13 பேரைக் கொன்று தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டு அச்சம்பவத்தின் போது காயமடைந்து வீரமரணம் அடைந்த தமிழீழ விடுதலைப் புலி இயக்கத் தளபதி செல்வநாயகத்திற்கு (செல்லக்கிளி) எமது வீரவணக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✪ ஏகாதிபத்தியங்களே எங்கள் எதிரிகள். ✪

இன்றைய தமிழ் ஈழப்போராட்டம் ஓர் புதிய பரிமாணத்தை எடுத்துவிட்டது. தமிழ் ஈழ மக்கள் ஒடுக்கப்படுவதையும் இன்னலுறுவதையும் பார்த்து கோடிக்கணக்கான மனிதாபிமான இந்திய மக்கள் இரக்கப்பட்டதும், வெகுண்டெழுந்ததும் உண்மை. ஆனால் அதேபோல தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று கட்சிகளிடையே இந்தியாவில் சிக்கி மூச்சுத் திணறுகிறது என்ற கசப்பான உண்மையினையும் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகிறோம்.

தமிழ் நாட்டிலே ஈழத்தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால்களும், தெரிவிக்கப்பட்ட கண்டனங்களும் எங்களுக்குத் தமிழீழத்தைப் பெற்றுத் தந்துவிடும் என்ற கற்பனையில் நாம் மிதப்பதில் எந்த அர்த்தமுமே கிடையாது. ஏகாதிபத்தியங்களின் சதியை உணர்ந்து கொள்ளாமல்... அவற்றுக்கெதிராக அணி திரளாமல் நாம் மேற்கொள்ளும் அல்லது எமக்காக மேற்கொள்ளப்படும் எந்த எதிர்ப்பு நடவடிக்கைகளாலும்... நெருக்குவாரங்களாலும் ஈழத்தமிழ் மக்களது பிரச்சினையின் அடிவேரைக்கூட அசைக்க முடியாது. ஏன் ஜெயவர்த்தனாவைக் கொல்வதும், சிறீலங்கா ஆயுதப்படைகள் அத்தனையையும் கொன்று விடுவதும் கூட ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகிவிடாது.

இலங்கையையும் அதன் முடுக்கூறான இந்திய உபகண்டத்தையும் அபிவிருத்தி செய்யவிடாமல் தடுத்தும், அதை ஒட்டச் சுரண்டியும் வரும் ஐரோப்பிய, அமெரிக்க நிதி மூலதனத்தின் அருங்கைப் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று விளங்க வருவில்லாமல், பிரச்சினைகளை மேல் மட்டத்தில் மட்டும் பார்த்து அதன் சாராம்சத்தை உடைத்துப் பார்க்கும் அறிதிறத்தைக் குறைய வைத்துக் கொண்டு ஈழத்தமிழர்க்கு மட்டுமல்ல, இந்திய உபகண்டத்தில் உள்ள எண்ணற்ற ஏழைகளுக்கும் எந்தவிதத்திலும் [illegible]முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஏகாதிபத்தியங்களின் நிதிகளே முட்டுக்கட்டையாக நிற்கின்றன என்பதை எந்தத் தலைவர்களும் உபகண்டத்தில் அம்பலப்படுத்தியதில்லை. ஏழைகளின் துயரங்களை உணர்ந்த அண்ணாவாக இருந்தாலும் சரி... ஏகாதிபத்தியங்களின் சதிகளை அறிந்த நேருவாக இருந்தாலும் சரி இதற்கு விதிவிலக்காகிவிடவில்லை. 1956ம் ஆண்டு இந்திய லோக் சபாவில் இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விவாத முடிவுரையின் போது கூட நேரு 'எமது பிற்போக்குத்தனமே எமது வறுமைக்குக் காரணம் என்கிறாரே ஒழிய நிதி மூலதனத்தின் சதியும் ஏகாதிபத்தியத்தின் அதீத சுரண்டலுமே எம்மை உருப்பட விடாமல் தடுக்கின்றன என்று சொல்லவில்லை.

இந்திய மக்களின் எல்லையில்லாத விசுவாசியாகிய பாரதி... 'கலையை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம், ஆலைகள் செய்வோம் கல்விச் சாலைகள் செய்வோம்' என்று முழங்கிய மிக உண்மையுள்ள அரசியல்வாதியாகிய பாரதியும் கூட ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையோ, நிதி மூலதனத்தின் அபிவிருத்தி செய்ய விடாத சதியையோ அங்கீகரிக்கவில்லை.

200 ஆண்டுகள் காலனித்துவ ஆட்சி திட்டமிட்ட சதியின் அடிப்படையில் நாடு கைத்தொழில் மயமாவதை தடுத்தது. முதலாம் உலக யுத்த காலத்தில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையிலான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்ட போதுதான் முதன் முதலாக இந்தியாவில் பருத்தி, சணல் தொழிற்சாலைகள் போட அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் உலகயுத்த முடிவிலேதான் இந்தியாவில் அதி தொழில் நுட்பம் குறைந்த பொருட்கள் உற்பத்திக்கு விடப்பட்டன. பிரிட்டன்வூட் ஒப்பந்தத்திற்குப் பின் சர்வதேச நாணயச் சபையை உருவாக்கியபோதும் இந்தியாவில் தொழிற்சாலைக்கான முதலீடு அனுமதிக்கப்படவில்லை. ஹொங்கொங்கிலும், சிங்கப்பூரிலும் செய்த அளவு கூட தொழிற்சாலை முதலீடுகளை இந்தியாவில் செய்ய அனுமதி கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேச் லூக்சம்போர்க் எழுதிய 'நிதி மூலதனத்தின் திரட்சி' என்ற புத்தகத்தில் இந்தியாவைக் காலனி ஆக்கிய பிரித்தானியர்கள், வீதிகள், பாலங்கள் அமைத்தார்கள் ஆனால் அதில் ஒன்றைக்கூட இந்திய மக்களின் நலனுக்காக அமைக்கவில்லை என்கிறார்.

இந்தியாவின் தேசிய முதலாளிகள் வெளிநாட்டு மூலதனத்தோடு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள். ஆதலால் இந்தியாவிலுள்ள முதலாளித்துவக் கட்சிகள் மூலதனத்தைத் தோற்கடித்து நாட்டை தொழிற்சாலை மயமாக்கப் போராடப் போவதில்லை. ஏனெனில் இந்திய உபகண்டம் தொழில்மயமாகினால் அது சர்வதேச வர்த்தகத்தில் நிவர்த்திக்கமுடியாத நெருக்கடியைத் தோற்றுவிக்கும்.

இந்தியாவில் உள்ள 1.2 பில்லியன் சனத்தொகையில் 9.5 விகிதமானவர்களே தொழிற்சாலைகளில் தொழில் புரிகிறார்கள். 8 வயதுக்கு மேல் உள்ளவர்களில் 69% மானோர் கல்வியறிவு இல்லாதவர்கள். சராசரி தனி நபர் வருமானம் வருடத்துக்கு 240 டாலர்கள் ஆகும். பிரான்சில் ஒரு நபரது சராசரி வருமானம் 11730 டாலர்கள் ஆகும். 4 மில்லியன் இந்திய விஞ்ஞானிகளும் தொழில்நுட்ப வல்லுனர்களும் வளர்ச்சியடைந்த நாடுகளால் கூடிய கூலி கொடுப்பதன் பேரால் வாங்கப்பட்டுள்ளனர். இந்தியவைத்திய சாலைகளில் ஒரு இலட்சம் பேருக்கு 75 படுக்கைகளே உள்ளன ஆனால் பிரான்சில் இது 1125 படுக்கைகளாகும். இந்தியாவில் ஒரு இலட்சம் பேருக்கு 26 வைத்திய நிபுணர்களே உள்ளனர். ஆனால் பிரான்சில் இது 164. இந்தியாவில் 1000 குழந்தைகள் பிறந்தால் அதில் சராசரி 122 இறக்கும். பிரான்சில் இந்த விகிதம் பூச்சியம்.

இந்தியாவில் ஏற்படும் அத்தனை கிளர்ச்சி எழுச்சிகளுக்கும் தாய் இந்த வாழும் நிலைமைதான். இந்தப் பிரச்சனைகட்கு விந்திட்டவர்கள் கூட இன்று ஈழவிடுதலை பற்றிப் பேசுகிறார்கள். குறிப்பாக போலி மார்க்சியக் கட்சிகள். உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த அசாம் பிரச்சனையின் போது இவர்கள் வெளிகளில் சென்று வங்காளத்திலிருந்து வந்த முஸ்லீம்களைத் தாக்கினார்கள். வங்காளத்திலிருந்து வந்த முஸ்லீம்களின் பிரச்சனையையும் ஈழத்தமிழ் மக்களது பிரச்சனைகளையும் பிரித்துப் பார்க்க முடியாது.

இந்தியாவில் செறிந்துள்ள அத்தனை பொருளாதார அரசியல், சமூகப் பிரச்சனைகளையும் விட்டு விட்டுத் திடீரென்று ஈழப்பிரச்சனையைத் தீர்க்க முன்வருவதென்பதும், இந்தியாவில் உள்ள அத்தனை ஒட்டுமொத்தப் பிரச்சனையின் ஒருபகுதியாக ஈழப்பிரச்சனையையும் தீர்க்க முன்வருவதும் வெவ்வேறு விதமான அணுகுமுறையாகும். இன்றைய ஈழ விடுதலைப் போராட்டமானது இந்திய உபகண்டப் புரட்சியை முடுக்கிவிடும் போராட்டம் என்பதை இந்திய உபகண்ட சமுதாய அமைப்பு முறையை முழுமையாகக் கிரகிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவில் மனிதன் மனிதனை வாழ முடியாத நிலைமைகளை அனுமதித்துக் கொண்டு, அதாவது ஏகாதிபத்திய நிதி மூலதனத்தினது ஒடுக்குமுறையை அனுமதித்துக் கொண்டு, ஈழவிடுதலைக்கு உதவுவோம் என்று கூச்சல் போடுபவர்களை ஈழத்தமிழ் மக்கள் நம்பினால் கட்டாயம் ஏமாறுவார்கள். காலம் இதை நிச்சயம் நிறுவிக் காட்டும். அதனால் ஈழவிடுதலைப் போராளிகள், ஈழவிடுதலைப் போராட்டத்திற்கான முன் முயற்சியின் போது முழு உபகண்டத்திலும் புரட்சியைக் கொண்டு வரவல்ல பிரயத்தனங்களைத் தட்டிக் கழிக்கக்கூடாது. ஈழவிடுதலையும் இந்திய உபகண்டப் புரட்சியும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத அம்சமாகும். இலங்கை முதலாளித்துவம் என்றால் என்ன இந்திய முதலாளித்துவம் என்றால் என்ன இரண்டும் ஒன்றுதான். அதுபோல ஏகாதிபத்தியம் என்றால் அது என்றும்.. எங்கும்... எப்போதும் எங்களுக்கு எதிரானது தான். இதை இப்போதும் நாம் உணரவில்லை என்றால் அடுத்துவர இருக்கும் வரலாறு உணரவைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

## பிரான்சு :

### "பிரான்சில் சமீப காலத்தில் ஆட்சி மாற்றம் எதுவும் ஏற்படாது" – வதந்திகளுக்கு பிரெஞ்சு ஜனாதிபதி முற்றுப்புள்ளி!



சோசலிச ஆட்சியின் பொருளாதாரக் கொள்கைகளின் தோல்வி, நாடு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் வேலை நிறுத்தங்கள்... ஆர்ப்பாட்டங்கள், மக்கள் மீது சுமத்தப்பட்ட வரி அதிகரிப்புகள், சோசலிசக் கட்சியினுள்ளே ஏற்பட்டிருக்கும் பிளவுகள் ஆகியன அபிப்பிராய வாக்கெடுப்புகளில் பிரெஞ்சு ஜனாதிபதியின் ஆதரவை மிகக் குறைந்த அளவிற்கு (35%) குறைத்ததுடன், எதிர்க்கட்சிகளையும் அமெரிக்க ஆதரவுப் பத்திரிகைகளையும் பிரான்சில் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்ற வதந்தியை கட்டிவிடச் செய்தது. ஆனால் சமீபத்தில் ஜனாதிபதி மித்திரான் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த விசேட பேட்டியில் இத்தகைய வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைத்ததுடன் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகளை விளக்கி 1988 ம் ஆண்டுவரை தாமே ஜனாதிபதி என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

### பிரெஞ்சுப் பொருளாதாரம் சீரடைகிறது!


அரசாங்கத்தின் கடுமையான பொருளாதாரக் கட்டுப்பாடுகள் பிரெஞ்சுப் பொருளாதாரத்தை சீரான பாதையில் இட்டுவரத் தொடங்கியுள்ளன. பிரான்சின் மாத வர்த்தகக் கடன் யூலை மாதம் 3 பில்லியன் பிராங்குகளாக இருந்தது. ஆனால் ஆகஸ்ட் மாதம் இது 87% ஆல் 470 மில்லியன் பிராங்குகளாக குறைந்துள்ளது. அத்துடன் வாழ்க்கைச் செலவுப் புள்ளி மட்டத்தில் கடந்த மூன்றுமாதங்களாக அதிகரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவீக்கம் அரசு எதிர்பார்த்த இலக்கான 8% ஆண்டு இறுதியில் அடையலாம் என நம்பப்படுகிறது. ஏற்றுமதியிலும் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்பார்த்தபடி நாணயப் பெறுமதிக் குறைப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பிரெஞ்சுப் பொருளாதாரம் சீரடைந்து வருவதற்கான சமிக்ஞைகளாகக் கருதப்படுகிறது.

## லெபனான்:

### லெபனானில் மீண்டும் கடும் சண்டை!



லெபனானில் கிறிஸ்தவ-இஸ்லாமியப் படைகளிடையே ஏற்பட்ட மோதல் பெரும் சண்டையாக உருவெடுத்துள்ளது. இதில் இருதரப்பையும் சேர்ந்த பல வீரர்கள் பலியாகியுள்ளதுடன் இரு இனத்தைச் சேர்ந்த பெருமெண்ணிக்கையான மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளையில் லெபனானில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க, பிரெஞ்சு, இத்தாலிய, பிரித்தானியத் துருப்புக்களும் லெபனான் இராணுவமும் தொடர்ச்சியான இஸ்லாமியவீரர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இதன் விளைவாக நூறை அண்மித்த லெபனான் இராணுவத்தினரும் 16 பிரெஞ்சு வீரர்களும் 2 அமெரிக்க வீரரும் இறந்துள்ளனர்... பலர் காயமடைந்துள்ளனர். இதையடுத்து அமெரிக்க பிரெஞ்சு போர்விமானங்கள் மேற்படி சண்டை நடக்கும் பகுதிகளில் தாளப்பறந்து குண்டு வீசப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளன. அத்தோடு அமெரிக்கப் போர்க்கப்பலும் தாக்குதலுக்கு ஆயத்தநிலையை அடைந்துள்ளது. அத்துடன் மேலும் 2000 வீரர்களை லெபனானுக்கு அனுப்ப அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்ட சில பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் மீள அழைக்கப்பட்டதும், லெபனானில் வெளிநாட்டு இராணுவ நடமாட்ட அதிகரிப்புமே இச்சண்டைகளுக்கான காரணங்களாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா:

### அமெரிக்காவில் றீகனுக்கு ஆதரவு குறைகிறது!



1984 ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தாம் மீண்டும் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி றீகன் அறிவித்திருக்கும் வேளையிலே அவருக்கான ஆதரவு அமெரிக்காவில் வெகுவாகக் குறைந்து வருவதை சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் காட்டுகின்றன. தற்போதைய வாக்கெடுப்புக்களின் படி 44% மானோர் மட்டும் றீகனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். நாட்டிலுள்ள 60%மான பெண்கள் றீகனுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி றீகனின் வெளியுறவு, ஆயுதம், பொருளாதார, இலத்தீன் அமெரிக்க கொள்கைகள் தொடர்ச்சியாக பெருங்கண்டனத்துக்குள்ளாகி வருகின்றன.

## சோவியத் யூனியன்:

### கொரிய விமானம் சுடப்பட்டதற்கு அமெரிக்காவின் சதியே காரணம்!

சோவியத் யூனியனின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் பறந்த தென்கொரியப் பயணிகள் விமானம் சோவியத் யூனியனால் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கும் அதில் பயணம் செய்த 269 பேர் கொல்லப்பட்டதற்கும் காரணம் திட்டமிடப்பட்ட அமெரிக்கச் சதியே காரணம் என்று கருதப்படுகிறது. மேற்படி கொரியப் பயணிகள் விமானத்தை ஒத்த தனது RC-135 உளவு விமானத்தை பயணிகள் விமானத்துக்கு மிக அண்மையில் பறக்கவிட்டுவிட்டு சோவியத் சமிஞ்ஞை சாதனங்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியதே விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளானதற்குக் காரணம் என்பதும் சோவியத் அதிகாரிகள் செய்த எச்சரிக்கைகள் கொரிய விமானியால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன என்றும் கருதப்படுகிறது. மேற்படி சூழ்ச்சியை ஏற்படுத்தி தனது சதியை வெற்றிகரமாக நிறைவேற்றிய அமெரிக்கா உலகெங்கும் சோவியத் யூனியனுக்கெதிரான கண்டனப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான்:

### சர்வாதிகாரி ஸியா வின் ஆட்சிக்கு விரைவில் முடிவு....?

அமெரிக்காவின் கைப்பொம்மையும், பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளருமான ஸியா-உல்-ஹக்கின் அரசுக்கெதிராக நாடுமுழுவதும் எதிர்க்கட்சிகளால் `புனித யுத்தம்' பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. சிந்து மாகாணத்தில் ஆரம்பமான இப்போராட்டம் தற்போது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஸியாவின் ஆட்சியில் மக்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டன, எதிர்க்கட்சிகள் தடை செய்யப்பட்டன, எண்ணற்றோர் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைகட்கு உள்ளாகிவருகின்றனர். தற்போது மக்களின் பொறுமை எல்லை கடந்து அவர்கள் அரசுக்கெதிராகப் பொங்கி எழுந்துள்ளனர். தொடர்ச்சியாக நடந்துவரும் இப்போராட்டத்தின் முதல் 10 நாட்களிலும் அரசபடைகள் 1500க்கும் மேற்பட்ட அரசியல்,தொழிலாளர் தலைவர்களை கைது செய்துள்ளதுடன் 30 பேரை சுட்டுக்கொன்றும், குறைந்தது 300பேரைக் காயப்படுத்தியும் உள்ளது. எப்படியிருப்பினும் போராட்டக்காரர்களின் உறுதி ஸியாவின் ஆட்சி அந்திமகாலத்தை நெருங்கியதைக் காட்டுவதாக இருக்கிறது.

## இந்தியா:

### பாகிஸ்தான் சம்பவங்கள் குறித்து இந்திரா ஆழ்ந்த கவலை!

பாகிஸ்தானில் தமது அடிப்படை உரிமைகளைக் கோரிப் போராட்டம் நிகழ்த்திவரும் மக்களுக்கெதிராக அரசபடைகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். எந்தவொரு நாட்டின் உள் விவகாரங்களிலும் தலையிடுவது இந்தியாவின் நோக்கமல்ல என்று கூறிய திருமதி காந்தி, இருப்பினும் மனிதாபிமானமற்ற செயல் எந்தவொரு நாட்டிலும் நடந்தாலும் இந்தியா அதைக் கண்டனம் செய்யும் என்று உறுதியாகக் கூறியுள்ளார். அதேவேளையில் பாக். கலவரங்களில் இந்தியாவை சிக்கவைக்கும் சதியில் பாக். அரசு ஈடுபட்டுள்ளதாக பாக். எதிர்க்கட்சித்தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. சபையில் இந்தியப் பிரதமர்!

ஐக்கியநாடுகள் சபையின் கூட்டத்தொடரில் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி மேற்படி தொடரில் மூன்றாவது உலகநாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள்... நிலைகள் தொடர்பாகவும் முதலாளித்துவத்தின் பொருளாதார அடக்குமுறைகளை அம்பலப்படுத்துவதுமான சொற்பொழிவை ஆற்றியுள்ளார். தமது வெளிநாட்டுப் பயணத்தின் போது இருநாள் பிரான்சுக்கும் விஜயம் செய்த அவர் பிரான்சிலும் இதர நாடுகளிலும் தாம் சந்தித்த தலைவர்களுடன் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனை குறித்து உரையாடியுள்ளார். அதேவேளை சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவும் சோவியத் தலைவர்களுடன் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தை நிகழ்த்தியுள்ளார்.

## பிலிப்பைன்சு:

### சர்வாதிகாரி மார்க்கோசுக்கு எதிராக பிலிப்பைன்சில் மக்கள் போர்க்கோலம்!

பிலிப்பைன்சு எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோ ஜனாதிபதி மார்க்கோசின் சதியினால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து பிலிப்பைன்சு மக்களின் பொறுமை உடைந்து போர்க்கோலம் பூண்டுள்ளனர். இலட்சக்கணக்கான மக்கள் சர்வாதிகாரி மார்க்கோசுக்கெதிராகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராகவும் கோஷங்களை எழுப்பி தொடர்ச்சியான போராட்டங்களை நிகழ்த்திவருவதுடன் மார்க்கோசை உடனடியாக பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யுமாறும் கோரியுள்ளனர். பல இடங்களில் போராட்டம் வன்முறையாக உருவெடுத்துள்ளது. அப்பாவி மக்கள் பலரை மார்க்கோசின் படைகள் கொன்றும் காயப்படுத்தியும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வானில் மதி ஒன்றென்பார்...."

## எழுத்துக்கள் இங்கே..! எழுதியவர் எங்கே..?



குட்டிமணியின் குழந்தைகள் மதிவாணன் (12), மதுமதி (7)

தங்கதுரையின் மகன் கரிகாலன் (வயது 2)

வானில் மதி ஒன்றென்பார்
நானோ மூன்றென்பேன்
ஏனென்றால் என் குழந்தைகள்
மதிவாணனும் மதுமதியும்
இருவரும் முழுமதி அல்லவோ
எனவே வானில் மதி மூன்றென்பேன்

செ. குட்டிமணி, NO-L10836
வெலிக்கடைச் சிறைச்சாலை கொழும்பு-9

தோழர்களே... தமிழ்முரசுடனான சகல தொடர்புகட்கும்...

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL. (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமிரின் மயக்கம் கலையவில்லை இன்னும் ..............

இத்தனை அவலங்கள் நடந்தும்... இத்தனை இழப்புக்களை எம்மக்கள் சந்தித்தும் கூட முதலாளித்துவத்தின் மீதும், பாசிசவாதி ஜெயவர்த்தனமீதும் அமிர்தலிங்கம் கொண்டிருக்கும் மயக்கம் கலையவில்லை... மாயை விலகவில்லை. ஈழத்துப் பிரச்சனைகளை விளக்க அவர் சோசலிச நாடுகள் இருக்கும் பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை. மாறாக ஜெயவர்த்தனவின் எஜமான நாடுகளுக்குத்தான் 'விஜயங்களை' மேற்கொண்டார்.

> **Mr Amirthalingham is in London seeking support for a federal solution to the crisis between the Tamil minority in the north of the island and the Sinhalese majority. However, Foreign Office Ministers are refusing to see him.**
>
> FINANCIAL TIME

அது மாத்திரமல்ல பி.பி.சி. வானொலிச் சேவைக்கு அளித்த பேட்டியில் ஐ.தே.கவினுள் இருக்கும் சிங்களத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்று இன்னும் ஜெயவர்த்தன மீது தமக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அனைத்துக்கும் மேலாக... எமக்கெல்லாம் பெரியதாக... எந்தக் கொள்கையை உயிரிலும் மேலாக மதித்து விடுதலைப் போராளிகள் இராப்பகல் பாராது... உணவை மறந்து... உயிரை வெறுத்து போராடுகிறார்களோ... எந்தக் கொள்கைக்காக இத்தனை இழப்புக்களைச் சந்தித்தோமோ... அந்தத் தமிழீழக் கொள்கையை தாரைவார்த்துவிட்டு வெறும் பிரதேச சுயாட்சி பற்றிய பிரச்சாரங்களைத்தான் மேற்கு நாடுகளில் அமிர்தலிங்கம் நடத்தி வருகிறார். முதலாளித்துவத்தின் மீதான அமிரின் இந்த மயக்கம் என்று தீருமோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✪ ஒடுக்கப்படும் இனங்களுக்காக ....... ஓங்கி குரல் கொடுப்போம்!

# உலக விடுதலை இயக்கங்களுடன் ........ ஒன்றுபட்டுப் போராடுவோம்!

இன்று எங்கள்மீது பேரினவாத வன்முறைத் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு இலட்சக்கணக்கான எம்மக்கள் வாழ வழியின்றி வாழ்க்கையுடன் போராடுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட இந்த நிலையில் நாம் இந்தியா இராணுவத்தை அனுப்பி எமக்கு உதவவில்லையே... உலகநாடுகள் எமக்காகக் குரல் கொடுக்கவில்லையே என அங்கலாய்க்கிறோம்: எந்த நாடாவது உதவாதா என ஏக்கத்துடன் எதிர்பார்க்கிறோம்.

ஆனால் இந்தவிடயத்தில்... உலகெங்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்களைக் கண்டிப்பதற்காக நாம் எப்போதாவது அணிதிரண்டிருக்கிறோம் என்று எம் நெஞ்சைத் தொட்டுக் கூறமுடியுமா? அடுத்த வீட்டு இளைஞன் ஈழப் போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்திலே ஆக்கிரமிப்புப்படையினரால் கைதுசெய்யப்படுவதைக் கூட அலட்சியமாக நோக்கி வந்தவர்கள்தானே நாம்.

உலகின் ஒவ்வொரு மூலையிலும் சர்வாதிகாரமும், ஏகாதிபத்தியமும் அமைத்து வைத்திருக்கும் சாக்காடுகளில் தினமும் பலிகொடுக்கப்படும் ஒடுக்கப்படும் மக்களுக்கெதிரான கொடுமைகளுக்கெதிராக கண்டனம் தெரிவிக்காத நாங்கள்... ஒருதுளி கண்ணீர் சிந்தாத நாங்கள்... இன்று எங்கள் பிரச்சினைகளை... எங்களுக்கெதிரான தாக்குதல்களை நாகரிக உலகம் முழுவதும் திரண்டெழுந்து கண்டிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாங்கள்... இந்த நாகரிகத்தை என்றாவது பின்பற்றியிருக்கிறோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சக்கணக்கான பாலஸ்தீனிய மக்கள் ஆக்கிரமிப்பாளரது அடக்குமுறைக் கொடுமைகளுக்குள்ளாகி சொந்த நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபோது அவர்கள் பக்கம் நாம் பார்வையைத் திருப்பினோமா? சப்ரா, சதில்லா முகாம்களில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் - பெண்களும், குழந்தைகளுமாக - கோரமாக வெட்டித் துண்டாடப்பட்டபோது எங்கள் மண்ணில் ஒரு வேளை துக்கம் அனுஷ்டிக்கப்படவில்லை ஒரு கறுப்புக்கொடி தொங்கவிடப்படவில்லை. ஒரு தமிழ்த்திரையரங்குகளுக்கு முன்னால் கூட்டத்திற்கோ குறையில்லை. இப்படித்தான் தென்னாபிரிக்க அரசின் கொடுமையான சட்டங்களைக் கண்டித்திருக்கிறோமா, தூக்கிலிடப்பட்ட விடுதலைப் போராளிகட்கு அனுதாபமாவது தெரிவித்தோமா? உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி இறப்பைத் தழுவிய அயர்லாந்தின் விடுதலைப் போராளிகளை நினைத்தாவது பார்த்தோமா?

அதிகம் போவானேன் இந்தியாவில் அஸாமில் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டபோது... ஏகாதிபத்தியத்தின் சதியால் அங்கு தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வறுமை ஆயிரக்கணக்கான மக்களை பலியாக்கியபோது ஒரு சுண்டுவிரலை உயர்த்தியிருக்கிறோமா... ஒரு சதத்தை நிவாரணமாய் அளித்திருக்கிறோமா...? நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் உண்மை சுடும். இந்த நிலையில்... உலகின் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை அலட்சியப்படுத்திக் கொண்டு விடுதலையை எப்படி வென்றெடுக்க முடியும்.

ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசாங்கத்தைப் பாருங்கள். தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விட்ட தாக்குதல்களின் இரத்தக் கறை உலர்வதற்கு முன்னரே தனது விசேட தூதுவரை சிங்கப்பூர், மலேசியா, கொரியா, பிலிப்பைன்ஸ, இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகளுக்கு அனுப்பி அடக்குமுறையாளருடனான தன்னுடைய பிணைப்பை இறுக்கமாக்கி தனது அடக்குமுறையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர வழிகோலிவிட்டது. தமிழ் மக்களை மேலும் மேலும் தாக்குவதற்கு ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சி வசதிகளைப் பெற்றுவிட்டது. ஆனால் நாம் இன்னும் குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டவே முயல்கிறோம்.

இந்த நிலையை ஈழ விடுதலை இயக்கங்கள் உடனடியாக மாற்ற வேண்டும். உலக விடுதலை இயக்கங்களுடன் உடன்பாட்டுக்கு வந்து அவர்களது போராட்டங்களுக்குத் தோள்கொடுக்க வேண்டும். குறிப்பாக ஆசியாவில் எங்கள் தொடர்புகளை விஸ்தரித்து இறுக்கமாக்க வேண்டும். இன்று ஏகாதிபத்தியத்துப் பெரும் நெருக்கடியை ஆசியாவில் — பாகிஸ்தானில் — தோற்றுவித்திருக்கும் மக்கள் கட்சியுடனும் — பிலிப்பைன்சில் எதிர்க்கட்சிக் கூட்டணியுடனும் ஏற்படுத்த வேண்டும். வியட்நாம் போர் அனுபவங்களை பாடமாகப் பயில வேண்டும். ஏனெனில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஆசியாவில் வலுவிழக்கச் செய்வதே எமது விடுதலையின் வெற்றிக்கான வழியாகும். இப்படி இந்தக் கட்சிகளோடு சேருவது தவறல்ல. இவை சரித்திரத்துக்குப் புதிதல்ல. 1926ம் ஆண்டு சீனாவில் புரட்சியாளர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் 'கோமிந்தாங்' ஜப்பானியக் கட்சியோடு சேர்ந்தனர். எனவே ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்துவதற்காக எமது தொடர்புகளை நாம் பரவலாக்க வேண்டும்.

இதைவிட இன்னுமொருபடி மேலே சென்று இந்திய தொழிலாளவர்க்கத்துடன் இறுக்கமான பிணைப்பை வளர்க்க வேண்டும். அவர்களின் இன்ப துன்பங்களில் நாம் பங்கு கொள்ளும் நிலைக்கு வர வேண்டும். இதையே விடுதலையை இலக்கும். எனவே உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்காக குரல் கொடுத்தலையும் அவர்களோடு ஒன்றுபட்டுப் போராடுவதையும் எமது போராட்டத்தின் அம்சங்களாகக் கொள்ளுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை விலங்குகள்

கவிஞர் / முத்துராமலிங்கம்

கால் விலங்கு
திறக்க
கையெலும்பால்
சாவி செய்தோம்;
விடுதலை மோதிரம்
சூடிய பின்போ
விரல்கள் கூட
விலங்கு தரித்துள்ளன!


வெள்ளைப் பூட்டுக்கள்
வாய் பிளக்கையில்
கறுப்புச் சங்கிலிகள்
கைகளைப் பிணைத்தன!
நாம்—
சொந்த வீட்டிலேயே
வாடகைக்கு
வசிப்பவர்கள்;
அதனால்தான்
நம்—
சுதந்திரத்திற்குக்
கொஞ்சம்
சுவாசப் பைகளில் கோளாறு!

ஃ ஃ ஃ

ரத்தாபிஷேகத்தில்
சிலிர்க்க வேண்டிய
சுதந்திர தேவி
மத்தாப்பு வெளிச்சங்களில்
மயங்கிக் கிடக்கிறாள்!

ஆம்—
பாலஸ்தீனியர்களுக்காய்
பரிதாபப்படுகிறவர்கள்....
நெல்சன் மண்டேலாவுக்காய்
நியாயம் கேட்கிறவர்கள்...
இலங்கைத் தமிழனுக்காய்
"ஏன்?"... என்று
கேட்கவும் தயங்குகிறார்களே!...

ஈழத் தமிழன்—
வியர்வை தந்தான்.
தேயிலை பிறந்தது
இரத்தம் தந்தான்
ரப்பர் பிறந்தது
இன்று—
உயிரும் தந்தான்
உணர்ச்சி பிறந்தது;
ஓ!....
இந்தியத் தாயே!...
இனி அவன்
என்ன தந்தால்
உன்—
இரக்கம் பிறக்கும்?...
புதிய—
ஈழம் மலரும்?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பிலுள்ள அகதிகள் முகாம் ஒன்று....

சிறிலங்கா அரசபயங்கரவாதமும்... பேரினவாதத் தாக்குதல்களும் எம் மக்கள் நாலாயிரம் பேரின் இரத்தத்தை... உயிரைக் குடித்தது... ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரை அகதிகளாக்கியது... எங்கள் நகரங்களை தீயிட்டது... எங்கள் உடமைகளைச் சூறையாடியது...! இத்தனை அவலங்களும்... இத்தனை இழப்புக்களும் வெறுமனே அவமாகப் போய்விடாமல் இவற்றை தமிழீழ விடுதலைக்கான முன்னெடுப்புக்களாகப் பயன் படுத்த வேண்டியதே தமிழீழ விடுதலை இயக்கங்களின் இன்றைய கடமையாகும்.

• • • • • • • • • • • • • • • • • • •

வெளியீடு
தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org